

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 168 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 15 – திங்கள்கிழமை 29 ஜனவரி 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 168 : Thiruvalluvar Year - 2055 - Thai 15 - Monday 29 January 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை ஈர்த்து பெருமளவு முதலீடுகளை தமிழ்நாட்டுக்கு கொண்டுவரவே இந்தப் பயணம்!

# ஸ்பெயினில் முதலீட்டாளர்கள் மாநாடு!

## 8 நாள்கள் வெளிநாட்டுப் பயணம் புறப்படும்முன் - விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 29 -**

**ஸ்பெயின் நாட்டில் 8 நாள்கள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு, சென்னையிலிருந்து நேற்று முன்தினம் மாலை புறப்படும் முன், விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை ஈர்த்து பெருமளவு முதலீடுகளை தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரவே இந்தப் பயணம்!" என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது பேட்டியில், "ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்றே, ஸ்பெயின் நாட்டிலும், முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த இருக்கிறேன். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், தொழில் முனைவோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்" என்று அறிவித்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.1.2024) மாலை, சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டிற்குப் புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பாக செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியதாவது :-

முதலில் அனைவருக்கும் நன்றி.

அனைவரின் ஆதரவோடு, நமது திராவிட மாடல் அரசின் 1 டிரில்லியன் பொருளாதார இலக்கை எட்டிவிடும் முயற்சிகளில், 2024ஆம் ஆண்டு தொடக்கமே உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றியாக அமைந்தது.

**பிப்.7 - சென்னை திரும்பிடல்!**

அதனைத் தொடர்ந்து இன்று பயண நாட்கள் தவிர்த்து 8 நாட்கள் பயணமாக ஸ்பெயின் செல்கிறேன். பிப்ரவரி 7ஆம் தேதி காலை சென்னை திரும்புகிறேன்.

**கடந்த இரண்டு பயணங்கள் மூலம் ரூ.7,442 கோடி முதலீடு ஈர்ப்பு!**

என்னுடைய கடந்தகால வெளிநாட்டுப் பயணங்களைப் பொறுத்தவரை, கடந்த 2022ஆம் ஆண்டு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஐக்கிய அரபு நாடுகள் சென்றிருந்தேன். அந்தப் பயணத்தில், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும் 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

அதேபோல, 2023ஆம் ஆண்டு மே மாதம் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு சென்றதில், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஆயிரத்து 342 கோடி ரூபாய் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இந்த இரண்டு பயணங்கள் மூலமாக, 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் 7 ஆயிரத்து 442 கோடி ரூபாய்க்கான முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**அரசின் வேகமான செயல் வடிவம்! பெரும் நிறுவனங்கள் பேரார்வம்!**

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு வேகமாக செயல்வடிவம் கொடுத்ததால் பல நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவத் தொடங்கியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓம்ரான் மற்றும் மிட்சுபிஷி போன்ற நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை நிறுவத் தொடங்கி விட்டார்கள்.

**கோவையில் - 'லூலூ குழுமம்' திட்டத்தைத் தொடங்கியது!**

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட இரண்டே மாதங்களில், 'ஓம்ரான்' நிறுவனத்தின் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதேபோன்று, சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கேப்பிடாலேண்டு நிறுவனத்தின் ஐ.டி. பூங்காவை சமீபத்தில் தொடங்கி வைத்தேன்.

**இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடுதான் உகந்த மாநிலம்!**

ஐக்கிய அரபு நாடுகளில் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், லூலூ பன்னாட்டுக் குழுமம், கோயம்புத்தூரில் தன்னுடைய திட்டத்தைத் துவங்கியிருக்கிறது.

"ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்றே, ஸ்பெயின் நாட்டிலும், முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த இருக்கிறேன். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், தொழில் முனைவோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்".

இந்த மாநாட்டில், தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் பற்றியும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு வசதிகள், மனிதவள ஆற்றல் போன்ற வற்றின் சிறப்பம்சங்களையும் எடுத்துக்கூறி, இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடு தான் உகந்த மாநிலம் என்று, அந்த நாட்டு முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்க இருக்கிறேன்.

**'இன்வெஸ்ட் ஸ்பெயின்' அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தை!**

இந்தப் பயணத்தின்போது, ரோகா (ROCA) மற்றும் கெஸ்டாம்ப், உட்பட சில பெரும் தொழில் நிறுவனங்களுடனும், 'Invest Spain' எனும் முதலீட்டு அமைப்புடனும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்தப் பயணத்தின் மூலமாக, ஐரோப்பிய நாடுகளின் கவனத்தையும் ஈர்த்து, அந்த நாடுகளில் இருந்தும் முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க முடியும் என்று நம்புகிறேன்.

எனவே, உங்கள் அனைவரின் வாழ்த்துக்களோடு இந்தப் பயணம் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

**கேள்வி:** – உங்கள் வெளிநாட்டுப் பயணம் வெற்றி பெற வாழ்த்துகள். பெரிய நிறுவனம் ஏதாவது வர வாய்ப்பு இருக்கிறதா? எவ்வளவு முதலீடுகள் எதிர்பார்க்கப் படுகிறது?

**முதலமைச்சர்:**– நான் பயணம் முடித்துவிட்டு வந்த பிறகு விளக்கமாகச் சொல்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னை விமான நிலையப் பேட்டியின் போது குறிப்பிட்டார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.1.2024) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பாக செய்தியாளர்களைச் சந்தித்தார்.



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (27.1.2024) சென்னை விமான நிலையத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.